EISSN 2456-5571

An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal

# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 6 | SPECIAL ISSUE 2 | NOVEMBER 2021 | E-ISSN: 2456-5571

சிறப்பிதழ் - வெளியீடு

**உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை**

**மற்றும்**

**குறிஞ்சி தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம், மதுரை**

பொருண்மை

**சிங்கப்பூர்த் தமிழறிஞர் மூ. தங்கராசனின்**

படைப்பாக்கங்கள்





தொகுப்பாசிரியர்கள்

**முனைவர் ந. இரத்தினக்குமார்**
உதவிப் பேராசிரியர்
மதுரைக் கல்லூரி, மதுரை

**முனைவர் சே. பாலகிருஷ்ணன்**
உதவிப் பேராசிரியர்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

| | | |
|---|---|---|
| 31 | மு. தங்கராசனின் 'அபூர்வ நண்பர்கள்' என்ற சிறுகதையில் சமுதாயச் சிந்தனை<br>**முனைவர் சா. வினோலியா சாலொமி சந்திரகாந்தம்** | 142 |
| 32 | கவிஞர் மு. தங்கராசனின் 'மாதுளங்கனி' கவிதைத் தொகுப்பில் வெளிப்படும் சமுதாயச் சிந்தனைகள்<br>**முனைவர் இரா. விஷ்ணுப் பிரியா** | 145 |
| 33 | 'பொய்கைப்பூக்கள்' கவிதையில் சமுதாயச் சிந்தனை<br>**முனைவர் கி.வேணுகா** | 152 |
| 34 | 'உதயம்' கவிதைத் தொகுப்பில் மனிதநேயச் சிந்தனைகள்<br>**முனைவர். பா. ஜான்சன்** | 154 |
| 35 | மு. தங்கராசனின் 'உதயம்' கவிதையில் பண்புகள்<br>**மு. ஜான்சி** | 159 |
| 36 | சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு. தங்கராசனின் கட்டுரைகளில் 'வேதாகமத் தாக்கம்'<br>**பா. ஜில் டேனியல் தங்கராஜ்** | 163 |
| 37 | கவிஞர் மு. தங்கராசனின் 'பனித்துளி' கவிதைத் தொகுப்பின் வழி வாழ்வியல் சிந்தனைகள்<br>**முனைவர். ந.ஜெயசுதா** | 167 |
| 38 | மு. தங்கராசனின் 'வாகைப்பூக்கள்' கவிதைத் தொகுப்பு வெளிப்படுத்தும் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகள்<br>**முனைவர் இரா.ஜெயந்தி** | 171 |
| 39 | "பூச்செண்டு" சிறுகதையில் படைப்பு உளவியல் - ஓர் பார்வை<br>**மு. ஜெயலட்சுமி** | 175 |
| 40 | மணக்கும் மல்லிகை சிறுகதைத் தொகுப்பில் குடும்பச் சூழல்கள்<br>**திருமதி. ஜெயஜோதி** | 181 |
| 41 | மு.தங்கராசனின் 'பதமியம்'<br>**முனைவர் சை. ஜெஸிமா** | 185 |
| 42 | எட்டின் எழுதாகப் பாடல் தொகுப்பாளி மு. தங்கராசன்: நாட்டுபுறத்தில் எனும் நூலை முன்வைத்து<br>**முனைவர் த.ஸ். ஸாம்தாஸ்** | 191 |
| 43 | மு.தங்கராசன் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்<br>**திருமதி அ.ஸ்ரீ ஜனனி** | 195 |
| 44 | மு. தங்கராசனின் 'மாதுளங்கனி' கவிதை உணர்த்தும் சமூகச்சிந்தனை<br>**முனைவர் இர. ஷீலாராணி** | 199 |
| 45 | மு. தங்கராசனின் சிறுகதைகளில் களமும் கதையாடலும்<br>**ப. ஷேக் செய்யது அலி** | 206 |
| 46 | மு.தங்கராசனின் 'உதயம்' – வார்த்தைகள் கட்டமைக்கும் சமூக அறம்<br>**முனைவர் பெ.ஹென்றி ஜூலியஸ்** | 210 |
| 47 | தமிழறிஞர் மு. தங்கராசனின் 'தமிழ் எங்கள் உயிர்' கட்டுரைத் தொகுப்பில் தமிழுணர்வு<br>**முனைவர் பெ. கி. கோவிந்தராஜ்** | 220 |
| 48 | மு.தங்கராசனின் சிறுகதைகளில் 'பெண்கள் குறித்த மரபுவழிக் கருத்தாக்கங்கள்'<br>**முனைவர் ம.செங்கோல் மேரி** | 225 |
| 49 | சிங்கையில் தமிழ்ச் சமுதாயமும் பண்பாடும்<br>**முனைவர் செ. சோபியா பெஞ்சமின்** | 229 |

# கவிஞர் மு. தங்கராசனின் 'மாதுளங்கனி' கவிதைத் தொகுப்பில் வெளிப்படும் சமுதாயச் சிந்தனைகள்

**முனைவர் இரா. விஷ்ணுப் பிரியா**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை*
*என். ஜி. எம் கல்லூரி, பொள்ளாச்சி*

## முன்னுரை

சிங்கப்பூரின் மூத்த கவிஞர்களுள் ஒருவராக விளங்கக் கூடியவர் மு. தங்கராசன். இவர் கவிதை, நாடகம் எனப் படைப்புலகில் தனக்கென ஒரு தனித்த இடத்தைப் பிடித்தவர். தமிழாசிரியராக, சமுதாயத் தொண்டராக, கலைஞராக, சிறுகதை யாசிரியராக, கவிஞராக வளர்ச்சி அடைந்தவர். தமிழ்ப்பற்று மிக்கவர். 2008 இல் கவிமாலையின் கணையாழி விருது பெற்றதோடு, 2012 இல் நல்லாசிரியர் விருதும் பெற்றவர். 23க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். தனது 86 ஆவது வயது வரை தமிழோடு நிறைவான வாழ்வை வாழ்ந்தவர். பல ஆண்டுகள் செம்பவாங் வட்டாரத்தில் வாழ்ந்து, அங்குள்ள தமிழ்ச் சமுதாய மக்களின் இன்ப துன்பங்களில் நேரடியாகப் பங்கேற்றுள்ளார். அவரது படைப்பில் நான்காவது கவிதைத் தொகுப்பாக 1989 இல் பூவழகி பதிப்பகத்தின் வாயிலாக 'மாதுளங்கனி' வெளி வருகின்றது. "மாதுளங்கனி" கவிதைத் தொகுப்பில் முப்பத்தைந்து தலைப்புகளில் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. கவிதைகளில் பெரும்பாலானவை நெடுங் கவிதைகள். ஒவ்வொன்றிலும் நூறு வரிகள் வரை அடங்கியுள்ளன. இக்கவிதைகள் ஒவ்வொன்றும் சமுதாயத்திற்குத் தேவையான சிந்தனைகளை வெளிப்படுத்துவதோடு, பல்வேறு நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டும் விதமாகவும் அமைந்துள்ளன என்பதை விளக்கும் விதத்தில் இக்கட்டுரை அமைகின்றது.

## குடும்பம்

சமுதாயத்தில் ஓர் ஆணும், பெண்ணும் சேர்ந்து நடத்துகின்ற வாழ்க்கையைக் குடும்பம் என்பர். இவ்வாழ்க்கை சிறப்புப் பெறக்காரணம் இல்லில் இருந்து அறம் செய்வதேயாகும். அதனாலேயே இதனை இல்லறம் என்றனர். இல்லில் இருந்து அறம் செய்வதாலேயே, குடும்பத் தலைவியை இல்லாள் என்றனர். இச்சொல்லை இல்+ ஆள் எனப் பிரித்து இல்லத்தை, வீட்டை ஆள்கின்றவள் என்று பொருள் கொண்டாலும் தவறாகாது. வீட்டிற்கு ஒளியாக அமைபவள் பெண்ணே.

இதனை,

> **"வீட்டிற்கு இருளகற்ற விளக்கு வேண்டும்;**
> **விளங்கு மெழில்வீடதனில் "குடும்பம்" வேண்டும்!..."**
> **"மங்கையரைக் "குலவிளக்கு" என்றே கூறி**
> **மதித்திடுதல் நம் தமிழர் மரபே யாகும்!"**
> **"நல்லதொரு குடும்பம் நல்விளக்கே யாகும்!"**

"மனையறத்தின் மாண்பெல்லாம்
மனத்துள்போற்றி புரிந்துணர்வின்
மதித்துவரல்
மாட்சியாகும்!"

என்ற இவ்வரிகளில் கவிஞர் பெண்மையின் நிலையையும், குடும்பத்தின் அமைப்பையும் விளக்குகின்றார். கணவன் மனைவி உறவு என்பது ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும்போது சிறப்படைகின்றது. "குறையில்லாக் குடும்பங்கள் இருப்பதுண்டா?" என்கின்றார். இரண்டு உள்ளங்கள் ஒத்து நடக்கும்போதுதான் உறவுகள் பறிமாறப்படுகின்றன. இந்தியாவின் பண்பாட்டை இக்குடும்ப அமைப்பே காக்கின்றது. இன்றைய திருமணங்களில் பல ஆடம்பரமாக நடந்து முடிந்த பின், ஒரு மாத முடிவிற்குள் பல திருமணங்கள் விவாகரத்து வழக்குகளில் சிக்கித் தவிக்கின்றன. இதற்கு அடிப்படை இல்லற வாழ்வில் புரிதல் இல்லாமையும், விட்டுக் கொடுத்து வாழாமையுமேயாகும். இதனையே வள்ளுவரும்,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"
(குறள்.45)

என்று குறிப்பிடுகின்றார். ஒரு குடும்பத் தலைவனுக்கு, அக்குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை ஈட்டித் தருவது கடமை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது பழமொழி. பொருள் உள்ளவரையே இவ்வுலகம் போற்றும். அக்கடமையைச் சரிவரச் செய்யாதவர்கள் செல்லாக் காசிற்குச் சமம் என்பதை,

"அருங்குடும்பம் அணிந்தொளிரக் கடமை ஆற்றும்
ஆண்மையிலா அங்கத்தினர் செல்லாக்காசே!
"வெறுங்குடும்பம் எனும் கிலையில் விளைந்து மேவும்
வினையாக்கம் கொள்ளாதார் செல்லாக்காசே!"

என்ற வரிகளில் எடுத்துரைக்கின்றார். மேலும், பெண்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டும்; இல்லையெனில் அவர்களும் செல்லாக்காசுதான் என்பதைத்

"தற்காத்துக் கொள்ளாத தன்மைப் பெண்ணாள்
தாரணியில் தன் மதிப்பை இழந்தகாசே!"

எனக் குறிப்பிடுகின்றார்.

**மழலைச் செல்வம்**

கடவுளுக்கு அடுத்த படியாக நாம் நினைக்கும் ஓர் உயர்ந்த உள்ளம் ஒன்று உண்டெனில், அது குழந்தைச் செல்வமே ஆகும். "ஒரு மனிதன் வாழ்ந்தான் என்பதற்கு அவன் ஒரு வீடாவது கட்டி இருக்க வேண்டும். ஒரு குழந்தையாவது பெற்றிருக்க வேண்டும். ஒரு நூலாவது எழுதி இருக்க வேண்டும்." (http.//தினமலர்; com.) என்கின்றது இத்தாலியப் பழமொழி. குடும்பத்தில் நடக்கின்ற சண்டைகள் பல சமாதானம் பெறுவதற்கும், மனக்குழப்பம் நீங்கி மனம் அமைதிபெற்று மகிழ்வடைவதற்கும் மழலைச் செல்வமே காரணம். ஒரு வீடு பணத்தினால், செல்வத்தினால் மட்டும் செழுமை பெறாது. அதனால் பலன் இல்லை; பயன் இல்லை. முழுமையான செல்வம் மழலைச் செல்வமே. இதற்கு ஈடு இணை எதுவும் கிடையாது. இதனை,





"இல்லறத்தின் நற்பண்பு இனிமை போற்றி
இயைந்து வரும் நற்குடும்பம் என்னும் வீட்டில்
நல்லறத்தின் நற்பயனாய் நயந்து தோன்றும்
நன் மக்கட் பேறுகளே நாட்டின் செல்வம்"

என்றவாறு, இம்மழலைச் செல்வத்தைப் புகழ்ந்து உரைக்கின்றார். மக்கட் பேற்றின் சிறப்பைப் பாண்டியன் அறிவுடை நம்பியும்,

"படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி,
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை – தாம் வாழுநாளே"
(புறம்:188)

என்ற வரிகளில் அறிவுறுத்துகின்றார். இதனை உணர்ந்தால் நமக்கு செல்வத்தின் மீது பற்று ஏற்படாது. இன்றைய கால கட்டத்தில் பொருளாதாரத்திற்காகப் பெற்றோர்கள், வேலைக்குச் செல்லும் போது குழந்தைக்கும், தாய்க்குமான பாச அரவணைப்பு பல நேரங்களில் இல்லாது போய் விடுகின்றது என்பதையும் மறுக்க இயலாது.

**குறிக்கோள்**

நாம் ஒரு குறிக்கோளை அடைய வேண்டுமானால் அதனைப் பற்றிய எண்ணம் நம் மனதில் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதற்கான வெற்றியைக் காணமுடியும். தன்னம்பிக்கையின் தனித்த அடையாளமாகத் திகழும் விவேகானந்தர், நாம் 'குறிக்கோளை அடையும் வரைப் போராட வேண்டும்; என்று கூறுகின்றார். இப்புவியில் பிறந்தால் மட்டும் போதாது; எப்படி வாழ வேண்டும்; எதற்காக வாழ வேண்டும் என்ற சிந்தனை நம் மனதில் எழவேண்டும். ஆடு, மாடுகளைப் போல, கல்லையும், மண்ணையும் போல வாழ்ந்தால் பயன் இல்லை. இதனை நாம் உணர வேண்டும். இவருடைய 'குறிக்கோள்' எனும் கவிதை இதனைப் பதிவு செய்கின்றது.

"எப்படியோ வாழ்ந்திடுவோம் என்றே எண்ணி
இலக்கின்றி இருந்திடுதல் என்றும் தீதாம்!
எப்படியும் வாழ்ந்திடலாம் என்ற ஒன்று
இழி தகைமை .........................."

மனிதனின் நிலையா வாழ்க்கையானது நிறைவுடைய வாழ்க்கையாக மாறுவது அவனுடைய கையிலேயே உள்ளது என்பதை இவ்வடிகளில் பதிவு செய்கின்றார். தற்காலப் புதுக்கவிதை யொன்று,

"நான் கட்டுப்பாட்டைச் சுட்டிக் காட்டும்
ஒரு சிவப்பு முக்கோணச் சின்னம்.
நேற்று – கரைந்து போன கனவு
நாளை - நம்ப முடியாத கற்பனை
இன்று – கையில் இருக்கும் காகிதம்
ஆற்றல் மிக்கவர் காகிதம்
தன்னை காவியம் ஆக்கலாம்."
(முனைவர் வை. இராமன், கவிஞர். மீராவின் கவிதை நயம், ப. 32)

என்று குறிப்பிடுகின்றது. எதாவது சாதிக்க வேண்டும் என்ற ஆற்றல் மனதில் எழுந்தால், சாதனையாளராகச் சரித்திரத்தில் இடம் பெற

முடியும் என்பதை இதன் வழி அறிய முடிகின்றது.

**விடா முயற்சி**

விடாமுயற்சி என்பது வெற்றியின் இரகசியம். நாம் வெற்றி பெறுவதற்கான ஆயுதமும் இதுவே. முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கும்போதுதான் ஒருவன் தோல்வியடைகிறான் என்பது சாணக்கியரின் வாக்கு. ஆகையால், எந்த ஒரு செயலையும் பாதியில் விட்டுவிடக் கூடாது. முழுமையாக அச்செயல் நடக்கும்வரைப் போராட வேண்டும். புதையலைத் தேடி ஒருவன் முக்கால்குழி தோண்டிய பின் சோம்பேறியானால், பின்னால் வந்து குழியைத் தோண்டும் இன்னொருவன் அப்பலனைக் பெறுவான் என்கின்ற கதையைப் போல அமைந்து விடும்.

**"மலை சரிந்து வீழ்ந்தாலும் மசியா நிற்கும்**
**மனவலிமை தொடர் முயற்சி மாண்பேயாகும்!**
**'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்'**
**நாவரசர் நமக் களித்த அமுத வாக்கு!"**
**"நெஞ்ச வலிமையால் எதையும் ஈங்கு**
**வளைத்திட முடியுமம்மா!"**

என்பதைக் கவிஞர் பறை சாற்றுகின்றார். ஔவையாரும் 'ஊக்க மது கைவிடேல்' என்று கூறியிருக்கின்றார். தன்னம்பிக்கையைவிடக் கூடுதலான ஊக்கம் வேறு எதுவும் இல்லை. தோல்வியைக் கண்டு துவளாமல், நம்மை நாமே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். குமர குருபரும் தமது நூலான

**'நீதிநெறி விளக்கத்தில்'**

**"மெய் வருத்தம் பாரார்பசி நோக்கார்**
**கண்துஞ்சார்**
**எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்**
**செவ்வி**
**அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்**
**கருமமே கண்ணாயினார்"**

என்று குறிப்பிடுகின்றார். இவை போன்ற அறிவுரைகளை நாம் பின்பற்றினால் வாழ்வில் முன்னேற்றம் அடையலாம்.

**இலாப நட்டம்**

வாழ்க்கையிலும், தொழிலிலும் இலாப நட்டம் என்ற ஒன்று இல்லாமல் இல்லை. இலாபத்தைப் பார்த்து மனம் மகிழ்கிறோம். நட்டத்தைப் பார்த்து மனம் கலங்குகிறோம். வெற்றி என்ற ஒன்று இருப்பின், தோல்வி என்ற ஒன்றும் இருக்கும். நல்லது, கெட்டது, பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம் என்ற ஒன்று வாழ்வில் நடைபெறாமல் இருக்காது. கவிஞர் தனது இலாப நட்டம் என்ற கவிதையில்,

**"எதிர்பார்ப்பு என்றொன்று இருப்பதாலே;**
**எண்ணியது நடக்காத ஏக்கம் தோன்றும்!**
**எதிர்பார்த்து இயங்குவதே மனித நெஞ்சம்;**
**இல்லையெனின் "ஏமாற்றம்" என்பதில்லை!"**

என்று தமது எண்ணத்தைச் சுட்டுகின்றார். விளாம்பழத்தைத் திரட்டி உருண்டை ஆக்கியவர் யார்? கலாப்பழத்தைக் கறுப்பு நிறம் ஆக்கியர் யார்? என்று எப்படி கூறமுடியாதோ அதைப் போல ஒருவரின் நல்வினை, தீவினையும் நடக்கக்கூடியன நிகழும். எதையும் எதிர்பார்த்து ஏமாற்றம் அடையக் கூடாது. உடல், அறிவு, செல்வம் எனப் பலவற்றிலும் ஒருவர் சிறப்புற இருக்க வேண்டும் என்று எண்ணினாலும், அதை முழுமையாக அடைய முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இதனை,





**"வளம்பட வேண்டாதார் யார் யாரும்**
**இல்லை**
**அளந்தன போகம் அவரவர் ஆற்றான்**
**விளங்காய் திரட்டினார் இல்லை களங்கனியைக்**
**கார் எனச்செய்தாரும் இல்"**
**(நாலடியார். 103)**

என்ற அடிகள் தெளிவு படுத்துகின்றன.

**எதிர் பார்ப்பு**

மனிதர்கள் ஒவ்வொருவரிடமும் எந்த ஒரு காரியத்திலும் எதிர்பார்ப்பு என்ற ஒன்று இருக்கும். வாழ்வில் நாம் நினைத்த ஒன்று கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் இருக்கும். எதிர்பார்ப்பு இல்லாத வாழ்க்கையில் பிரச்சினை வராது. மனம் அமைதி உறும். ஒன்று நடக்காத போது எந்த ஒரு செயலிலும் ஏமாற்றம் நிகழாது. இராவணனின் எதிர்பார்ப்பு சீதையிடம் நடைபெறவில்லை. சூர்ப்பனகையின் எதிர்பார்ப்பு இராமனிடம் நடைபெற வில்லை. இதுபோன்ற எதிர்பார்ப்புகள் அவர்களின் மன ஏமாற்றத்தோடு நிற்பதில்லை. அவர்களின் அழிவுக்கும் காரணமாக அமைகின்றது. இலவங்காய் பழுக்குமென்று கிளி நம்பினால் அது வெடித்து பஞ்சாய் மாறும். '**இலவங்காய் பழுக்காது**'. இக்கிளியைப் போல் மனிதர்கள் ஒன்றை நினைத்து ஏமாற்றம் அடைகின்றனர். தூங்குக்குட்டி நீண்ட கொடியைப் பார்த்து பாம்பு என நினைத்தால் ஏமாற்றமே. பேருக்கும் புகழுக்கும் ஆசைப் படக்கூடாது. இவ் ஏமாற்றத்தை,

**"எதிர்பார்ப்பு என்றொன்று இருப்பதாலே**
**எண்ணியது நடக்காத ஏக்கம் தோன்றும்!**
**எதிர்பார்த்து இயங்குவதே மனித நெஞ்சம்;**
**இல்லையெனின் "ஏமாற்றம்" என்பதில்லை!"**

என்று வரிகளில் கூறுகின்றார்.

**உழைப்போரே உயர்வர்**

உழைப்பில்லாமல் உயர்வு இல்லை. மந்திரத்தாலும், தந்திரத்தினாலும் வாழ்க்கையில் பயன் இல்லை. மனத்திண்மையோடு உழைத்தால் வாழ்வில் உயரலாம். வாய்ப்பு வரும்வரை நாம் காத்திருக்காது வாய்ப்பை நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு நெஞ்சில் உரம் வேண்டும். மனம் புண்பட்டாலும் விழாது. தாழ்வு மனப்பான்மை இன்றித் தன்மானத்துடன் இருக்க வேண்டும் அப்போது அவ்வாழ்வு சொர்க்கமாக இருக்கும். குறுக்கு வழியில் செல்பவர்களின் புகழ் நீடிக்காது. ஒரு நாள் குலையும். கடின உழைப்பு இல்லையெனில் தரணியில் புகழ் இல்லை. தன்மீது நம்பிக்கை இல்லாதவர்கள் தன்மானத்தை இழந்தவர்களாவர். அவர்களின் பாதையும் தவறானதாகவே அமையும். இதனை,

**"மந்திரத்தால் மாங்காய்கள் வீழும் காட்சி**
**மண்ணுலகில் என்றேனும்**
**மலர்ந்ததுண்டா? "**

என்ற வரிகளில் கவிஞர் எடுத்தாள்கின்றார். உழைப்பு உண்மையாக இருந்தால் உயர்வு தானாய்த் தேடிவரும். வாழ்க்கைப் பயணத்தில் நாம் சாதனை என்னும் சிகரம் அடைய, நமக்கு வேண்டிய மூலதனம் உழைப்பு மட்டுமே.

**"உழைப்பிலாதெ வரும் இந்த உலகினில்**
**உயர்ந்ததில்லை;**
**உழைப்புதான் உயர்வு நல்கும் உன்னதம்**
**வாழ்வின்வெற்றி!"**
**"எங்கெவர்க்கும் இவ்வுலகில் உயர்வுதோன்றல்**
**எழுந்துவரும் தன்முனைப்பு உழைப்போகும்!"**

என்று, நீண்டு செல்கின்றது உழைப்பு குறித்த இக்கவிதை. கவிஞரின் வெற்றிக்கு உழைப்பு

மூலதனமாய் இருந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

**"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்" (குறள்: 619)**

என்ற குறளில் இதனை அறிய முடிகின்றது. நாம் சோம்பேறித்தனமாக இருந்தால், மற்றொருவர் உழைப்பில் வாழ்ந்தால், பிறப்பிற்கான பலன் இல்லாமல் போய்விடும் என்பதைக் கவிஞரின் வழி அறிய முடிகின்றது. இறையருளால் எதுவும் நடக்கும் என்று நினைக்கக் கூடாது. இதற்குப் பதிலடியாக,

**"இறைவனே கதியென்றாகி இருந்திடா**
**எழுச்சி வேண்டும்**
**இறைவனின் அருளும் தோன்றி**
**இயைந்திடும் வாழ்வின் வெற்றி!"**

என்ற வரிகளில் உரைக்கின்றார்.

**கல்வி**

கல்வியானது இன்ன சமூகத்தினருக்கு மட்டும் உரியது என்று ஒதுக்கி விட முடியாது. அனைவருக்கும் பொதுவான ஒன்றாகக் கல்வி விளங்குகின்றது. பிறருக்குக் கொடுப்பதால் குறையாது. விலங்குகளினும் மனிதன் வேறுபட்டு நிற்பதற்கு இப்பண்பே அடிப்படை. அறிவின் ஆற்றல் விரிவடையவும், பிறரால் மதிக்கப்படவும், செல்வம் தழைக்கவும், தன்னம்பிக்கை வலுப்பெறவும், நமக்கு ஊன்றுகோலாக விளங்குவது கல்வியே. கல்லாத மாந்தர்கள், வெற்றியடையாத புகழையுடையவர்கள், மனதில் உள்ளதை வெளிப்படுத்தாத மதிப்பிழந்த சொற்கள், அவைக்கு பயந்து திறமையை வெளிப்படுத்தாத சொல்லாளன், ஒழுக்கம் இல்லாதவன், கனிவில்லாத காரியங்கள் செய்பவன் போன்றவர்கள் செல்லாத காசிற்குச் சமம் என்று சுட்டி, கவிஞர் தமது கருத்தை உரைக்கின்றார்.

**"கற்றலினால் பயனென்ன? கற்றதைப்போல்**
**கவினுலகில் கற்ற பயன் காட்ட வேண்டும்**
**கற்றவற்றைச் சிந்தித்துக் கடைபிடித்துக்**
**கனிவார்ந்து ஒழுகுதலே "கற்பின்" மேன்மை"**

என்ற கவிப்பாடல் அடிகளின் கருத்து

**"கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக" (குறள் : 391)**

என்ற வள்ளுவரின் கருத்திற்கு உடன்பட்டுச் செல்வதைக் காண முடிகின்றது.

**விதி**

மக்கள் பொதுவாக வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளை எல்லாம் தங்களோடு வாழ்பவர்கள் மீதோ அல்லது தெய்வத்தின் மீதோ சுமத்தி விடுகிறார்கள். ஏதாவது பிரச்சினை வரும்போது 'எல்லாம் என் தலைவிதி' என்று குறைகூறுகின்றனர். விதியை யாராலும் வெல்லமுடியாது. இவ்வுலகில் நமக்கு வரவேண்டியது வந்தே தீரும். அறிவால் வென்றார் யாரும் இல்லை. இருந்திருப்பின் இறப்பு என்பதே கிடையாது. இதனை,

**"மதியதனால் விதிவசத்தை மாற்றக்கூடும்;**
**மன்னுபுகழ் பகுத்தறிவின் மாண்பு கூறும்!**
**"விதியமைப்பை மதியுறைவால் வென்றார் உண்டா?**
**வெல்திறமும் விளைந்திட்டால் இறப்பே இல்லை"**

என்ற வரிகளில் எடுத்துரைக்கின்றார். "விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக் கொள்கிறோம். எனவே, அதன்பொருட்டுத்






தூற்றுவதற்கும் ஒருவருமில்லை; பாராட்டுவதற்கும் ஒருவருமில்லை." (பி.எஸ். ஆச்சார்யா, ஸ்வாமி விவேகானந்தர் வாழ்வும் வாக்கும், ப. 48) என்ற செய்தியின் வழி இதனை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

**முடிவுரை**

குடும்பத்தை எப்படி வழிநடத்த வேண்டும்; குழந்தைப் பேற்றின் முக்கியத்துவம் என்ன?; கல்வியின் இன்றியமையாமை, உழைப்பின் உன்னதம்; வாழ்க்கையில் நாம் எதை நோக்கிப் பயணிக்கின்றோம், அடைய வேண்டிய குறிக்கோள் என்ன? ஒன்றைச் சாதிக்க வேண்டுமெனில் நாம் எதை விடக்கூடாது எனப் பலகருத்துக்களை உள்ளடக்கியதோடு, சமுதாயம் மேம்படுவதற்குத் தேவையான இன்ன பிற கருத்துக்களையும் ஆசிரியர் தனது கவிதைகளில் பதிவு செய்திருக்கின்றார். இவற்றைப் பின்பற்றினால் வாழ்வில் உயரலாம்; நலம் பெறலாம் என்பதை இங்கு அறிய முடிகின்றது.